# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : STC.193/2024 Date: 18.07.2025
Deposition of Witness for : **பு.சா.1**
Name : **காந்தி**

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**குறுக்கு விசாரணை :-**

1) நான் கோழிகால்நத்தம், திருச்செங்கோட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் 10 ம் வகுப்பு பாதிவரை படித்துள்ளேன். நான் தற்போது லாரி பாடி பில்டிங் வேலை செய்து வருகிறேன். ஆரம்ப காலத்தில் நான் SRL லாரி பாடி பில்டிங் நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு மாத சம்பளம் எவ்வளவு என்றால் ஒப்பந்த தொழில் என்பதால் நிலையாக வருமானத்தை சொல்ல இயலாது.

2) எதிரி என்ன ஊர் என்றால் தங்காயூரை சார்ந்தவர். தங்காயூருக்கும், நான் வசிக்கும் கோழிகால்நத்தத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 16 கி.மீ. எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் SRL லாரி பாடி பில்டிங் நிறுவனத்தில் மேலாளராக பணிசெய்து வந்தார், அந்த வகையில் எனக்கு பழக்கம். எதிரியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 4-5 வருடங்களாக தெரியும். எதிரி SRL லாரி பாடி பில்டிங் நிறுவனத்தில் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்றால் தெரியாது.

3) எதிரி என்னிடம் எந்த காரணத்திற்காக கடன் கேட்டார் என்றால் நிலம் வாங்கியதை கிரையம் செய்ய வேண்டும் என்று கேட்டார். நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் மேற்படி சங்கதிகளை சொல்லிதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி எந்த தேதியில் என்னிடம் கடன் கேட்டார் என்றால் கடந்த 02-10-2023 ம் தேதி கடன் கொடுத்தேன், அதற்கு முன்பாக 02 மாதங்களாக என்னிடம் கடன் கேட்டார். நான் எதிரிக்கு எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால் என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது, எதிரியுடன் யார் யார் வந்திருந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை, அவர் மட்டும் தான் வந்தார்.

4) எதிரிக்கு எத்தனை மணிக்கு கடன் கொடுத்தேன் என்றால் காலை சுமார் 11.00 மணிக்கு கொடுத்தேன். எதிரிக்கு கடன் கொடுத்த சமயத்தில் என்னுடைய வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் எனது அம்மா, மனைவி இருந்தார்கள். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் கடன் தொகையை நான் கையில் வைத்திருந்தேனா என்றால் இல்லை, நகைகளை அடமானம் வைத்தும், லோன் வாங்கியும், மற்ற நபர்களிடம் கடன் வாங்கியும் கொடுத்தேன். நான் நகைகளை எந்த வங்கியில், எவ்வளவு தொகைக்கு அடமானம் வைத்தேன் என்றால் கூட்டுறவு வங்கியிலும், வேறு நபர்களிடம் நகையை கொடுத்தும் கடன் வாங்கினேன்.

5) நிலம் வாங்குவதற்காக நான் கடன் வாங்கி வைத்திருந்த தொகையை எதிரி கேட்டதால் கொடுத்தேன். கூட்டுறவு வங்கியில் நான் என்ன மாதிரியான நகையை வைத்தேன் என்றால் தோடு, மனைவியின் தங்க நகைகள் ஆகியவற்றை கடன் வாங்கி அதனை திருப்பியும் செலுத்திவிட்டேன். கூட்டுறவு வங்கியில் எந்த

தேதியில் வைத்தேன் என்றால் அடிக்கடி வைத்துள்ளதால் தேதி ஞாபகமில்லை. நகைகளை அடமானம் வைத்தும், லோன் வாங்கியும், மற்ற நபர்களிடம் கடன் வாங்கியும் எதிரிக்கு நான் கடன் கொடுத்தேன் என்று சொல்லும்போது அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) எனக்கு ஏலச்சீட்டு போடும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். எதிரி நடத்திய ஏலச்சீட்டில் நானும் சந்ததாரராக உள்ளேன் என்றால் சரிதான். எதிரி நடத்திய ஏலச்சீட்டில் நானும், தங்கவேல், சங்கர், பாலன், ஈஸ்வரமூர்த்தி, சுரேஷ், மற்றொரு சங்கர், பார்த்திபன் மற்றும் தங்கராஜ் ஆகியோர் சந்தாதாரர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன, ஏலச்சீட்டில் நான் இரண்டு சீட்டுகளில் இருந்தேன் என்றால் சரிதான். எதிரி நடத்திய ஏலச்சீட்டுகளை சரிவர நடத்தி வந்தாரா என்றால் இல்லை.

7) எதிரி ஏலச்சீட்டுகள் நடத்திய சமயத்தில் விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் வேறு நபர்கள் அடித்ததால் அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாக கூறினார்கள். எதிரி விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றும், அந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. புகார் மனுவில் எதிரி என்னிடம் 28-10-2021ம் தேதி தான் ரூ.5,00,000/-ம் கடன் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான்.

8) எதிரி நடத்திய ஏலச்சீட்டில் எதிரி எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்றால் இரண்டு ஏலச்சீட்டுகளுக்கும் சேர்த்து ரூ.1,60,000/-ம் ஆகும். எனது மேலாளர் சின்னதம்பி என்பவர் எதிரி கொடுக்க வேண்டிய சீட்டுதொகை சம்பந்தமாக எங்களுக்குள்

சமாதானம் பேசி எதிரி ரூ.1,60,000/-ம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் என்றால் சரிதான். எதிரி ரூ.1,60,000/-தொகை கொடுக்க வேண்டியிருந்ததால் அதற்கு ஆதரவாக காசோலை மற்றும் வெற்று பத்திரத்தை எதிரியிடம் பெற்றுகொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி ஏலச்சீட்டு தொகைக்காக பிணையமாக வழக்கு காசோலை மற்றும் வெற்று பத்திரத்தை பெற்றுக்கொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எதிரி என்னிடம் பெற்ற ரூ.5,00,000/-ற்கு தான் வழக்கு காசோலை கொடுத்தார்.

9) எதிரிக்கு நான் ரூ.5,00,000/- கடன் கொடுத்தாக சொல்லும் தேதிக்கு முன்பே எதிரி எனக்கு சீட்டு தொகை பாக்கி தரவேண்டிய பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். ஏற்கனவே, சீட்டு சம்பந்தமாக பிரச்சனை இருந்த சமயத்தில் நான் மீண்டும் எதிரிக்கு ரூ.5,00,000/- கடன் கொடுத்தாக சொல்லும் சங்கதி பொய் என்றால் சரியல்ல. எதிரி ஏலச்சீட்டு நடத்தி பாக்கி தொகையான ரூ.1,60,000/-ல் எவ்வளவு தொகை திருப்பி கொடுத்தார் என்றால் சுமார் ரூ.16,000/-ம் தான் எதிரி என்னிடம் கொடுத்தார்.

10) எதிரி ரூ.16,000/- கொடுத்தது போக மீது தொகை இன்று வரையும் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஏலச்சீட்டு தொகை பாக்கி தொகை கொடுப்பதற்காக தான் பிணையமாக இவ்வழக்கு காசோலை பெற்றுகொண்டு ரூ.5,00,000/-ம் கடன் கொடுத்தாகவும், அதற்க்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை கொடுத்தாகவும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நகையை அடமானம் வைத்தும், கடன் வாங்கியும் எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரிமீது பொய் வழக்கு போட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Gandhi